மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம் மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(8) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(7) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி நிறுவன நிதி (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இம் மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(7) அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1970-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.